**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, FAST TRACK COURT, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 561/2019 P.W. 5/L.W.5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு.சுரேஷ்குமார் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ.சுந்தர்ராஜ் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 06.08.2025.**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்.**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து டையல்ஸ் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரர் கிளாட்சன் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பத்தை நான் எப்பொழுது போட்டேன் என்று எனக்குத் தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதின் அடிப்படையில் நான் கையொப்பம் செய்தேன். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார். இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154–ன் கீழ் அனுமதிக்கிறது.**

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

1. கடந்த 06.01.2013ம் தேதி பகல் 12.30 மணி அளவில் காவல் உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அந்த பார்வை மகசரில் நானும், தயா என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று கூறிவிட்டு தற்பொழுது வழக்கின் உண்மை நிலையை மறைத்து எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மை சங்கதியை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. கிளாட்சன் என்பவரின் கடையில் நான் பணிபுரிந்தேன் என்றால் சரிதான். 06.01.2013ம் தேதி கிளாட்சன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றாரா என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. அந்த காலகட்டங்களில் நான் அவருடன் இருந்தேனா என்றால் நான் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். ஜான்பிரிட்டோ, றோஸ்லின் சுனில்ராஜ், தயா, பிரின்ஸ் ஸ்டான்லி ஆகியோர்கள் கிளாட்சனின் நெருங்கிய நண்பர்கள் என்றாலும் கடைக்கு வந்து செல்வார்கள் என்றாலும் சரிதான். நான் கையெழுத்து போட்ட ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.